## நான் எங்கே உதவி பெற முடியும்?

1. நீங்கள் தனியாகவும் உதவியின்றியும் இருக்கிறீர்கள் என நீங்கள் உணர்வதை நான் விரும்பவில்லை.

2. உதவி செய்ய உங்கள் பெற்றோர்கள் இருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் உங்களுடைய பெற்றோருக்கு சுமையாக உள்ளீர்கள் என நினைக்க வேண்டாம். அவர்களிடம் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் பேசுங்கள். நீங்கள் ரேக்கிங் செய்யப்பட்டால் – அது உங்களுடைய தவறு அல்ல. அவர்கள் அதைப் புரிந்துகொள்கிறார்கள்.

3. ரேக்கிங் தடுப்புத் திட்டத்தில் நாங்கள் உதவத் தயாராக இருக்கிறோம். 1800 180 5522 என்ற எண்ணில் நீங்கள் எங்களை எந்த நேரத்திலும் அழைக்க முடியும். இது ஒரு இலவச தொலைபேசி. நீங்கள் எங்களுக்கு helpline@antiragging.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் கூட அனுப்பலாம்.

4. உங்களுடைய கல்லூரி நிர்வாகமும் உதவுவதற்காக உள்ளது –தயவுசெய்து உதவி கேட்கத் தயங்காதீர்கள். அவர்கள் நிச்சயமாக உங்களுக்கு உதவுவார்கள். உள்ளூர் காவல்துறையும் உள்ளூர் நிர்வாகமும் கூட உங்களுக்கு உதவுவதற்காக உள்ளது.

5. ரேக்கிங் புகாரை யார் வேண்டுமானாலும் பதிவு செய்யலாம். அது பாதிப்படைந்தவராகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. நீங்கள் ஏதேனும் ரேக்கிங் நிகழ்ச்சியைப் பார்த்தால் அழைப்பு மையத்துக்கு நீங்கள் தகவல் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்வது உங்கள் கடமை.

6. அநாமதேயமாகவும் நீங்கள் ஒரு ரேக்கிங்கைப் பதிவு செய்யமுடியும். இருப்பினும் நீங்கள் இதைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்க்க வேண்டும், ஏனெனில் விவரங்கள் தெரியாமல் எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு எங்களுக்கு சிரமமானதாகிறது. இரகசியத்தன்மைக்கு நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்க முடியும்.

7. உங்கள் புகாரின் முன்னேற்றத்தை அறிந்துகொள்ள www.antiragging.in